**செ. கு. எண்: 153** **நாள் :20.11.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 20.11.2015

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் பெய்த வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 16.11.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், சமத்துவ பெரியார் நகரைச் சேர்ந்த திரு தர்மையா என்பவரின் மகன் பீமைய்யா மற்றும் ராமகிருஷ்ணா நகரைச் சேர்ந்த வேலு என்கிற சக்திவேலு;

காஞ்சிபுரம் வட்டம், தாட்டிதோப்பு கிராமத்தைச் சேர்ந்த திரு பாஸ்கர் என்பவரின் மகன் சத்யா;

சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டத்தைச் சேர்ந்த, திரு ஹயாத் பாஷா என்பவரின் மகன் முகமது ஆசிப்; அமைந்தகரை வட்டம், பெரியகூடல் கிராமத்தைச் சேர்ந்த எத்திராஜ் என்கிற ராஜன்;

–– ஆகியோர் வெள்ளப் பெருக்கின் காரணமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் செய்தியையும்;

17.11.2015 அன்று சென்னை மாவட்டம், அயனாவரம் வட்டம், கொளத்தூரைச் சேர்ந்த அபிஷேக் மற்றும் இந்துமதி;

18.11.2015 அன்று சென்னை மாவட்டம், சூளையைச் சேர்ந்த திரு வரதராஜன் என்பவரின் மகன் வசந்தகுமார்;

–– ஆகியோர் மழையின் காரணமாக மின் கசிவு ஏற்பட்டு மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

19.11.2015 அன்று நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், முட்டாஞ்செட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு அப்துல்வாஹித் என்பவரின் மகன் பசீர் அகமது கனமழையின் காரணமாக வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழகத்தில் சமீபத்தில் பெய்த கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த மேலும், இந்த **9** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**